*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.404/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-6 (LW-14)***

*Name / Father's Name:* ***திருமதி.நிர்மலா க/பெ. முருகன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.08.2025.**

துவக்க நேரம் 01.03 A.N

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் வாழப்பாடி அனைத்து மகளிர் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.08.2023ம் தேதி நான் கெங்கவல்லி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபொழுது நிலையம் ஆஜராகி புகார்தாரர் ரமேஷ் என்பவர் கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று, புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண்.192/2023 இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)-ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, வழக்காவணங்களை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) புகாரினை யார் கொடுத்தார்கள் என்றால் ரமேஷ் என்பவர் கொடுத்தார். புகார் புகார்தாரரால் எழுதி கொடுக்கப்பட்டதா, அல்லது புகாரை நானே எழுதி புகார்தாரரிடம் கையெழுத்து வாங்கினேனா என்றால் புகார்தாரரே புகாரை எழுதிகொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்.

2) புகாரை பெற்று, நான் சம்பவயிடம் சென்று பார்த்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். நான் சொன்னதுபோல், நான் சம்பவயிடம் சென்று சரிவர

விசாரித்திருந்தால் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.12 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.14 15:49:34 +0530

Judicial Magistrate No.2, Attur.